ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 2 | காஞ்சிபுரம் 16—1—44 சுபானு தை 3—ஞாயிறு | இதழ் 44

## கதிரேசருக்கு!

பரதன்.

"பக்தா! எழுந்திரு!"

"ஏண்டி, இப்படி உபத்திரவம் செய்கிறாய்? தூங்கஆரம்பித்ததே பனிரண்டு மணிக்கு. மறுபடியும் எழுப்பி, உயிரை வாட்டுகிறாயே. உன்னோடு வாழ்தலரிது"

"பக்தசிகாமணீ! எழுப்புவது, உன்பத்னியல்ல. பாபம்! அம்மையார், அலுத்துத்தூங்கிவிட்டார்கள். கண்திறந்து பாரப்பனே! பரமசிவன், ஆலவாயப்பன், முக்கண்ணன், வந்திருக்கிறேன், தெரியவில்லையா, இதோ இப்படிப்பார்"

"யாரது? அடடா, என்னவாழ்க்கை' என்ன வேதனை. இந்தவேளையிலும், எவனோ வந்து உயிரைவாட்டுகிறான். யாரப்பா அது? கண்ணைத்திறக்கக்கூட முடியவில்லை, ஒரே எரிச்சல்"

"ஊனக்கண்ணைஅல்ல, ஞானக் கண்ணைத்திற"

"ஐயயோ, பாம்பு, பாம்பு! அடி, அகிலாண்டம், எழுந்திரு, விளக்கை ஏற்று, தடிஎடு. பாம்பு!"

"பயப்படாதே,"

"ஐயயோ புலியும் வந்திருக்கிறதே! தாடியும் மீசையுமாக ஒரு ஆசாமி! அகிலாண்டம், அடி அகிலாண்டம், நாசமாய்ப்போனவள், இப்படித்தூங்கலாமா?

"புலித்தோலாடையுடன் பாம்பாபரணனாக உள்ள பரமசிவன் உனக்குத்தெரியவில்லையா! பக்தா! பயப்படாதே! பாம்பு, ஒன்றும் செய்யாது. கடித்தாலும் குற்றமில்லை, மந்திரமாவது நீறு என்ற பதிகத்தை நீ அறியாயா!"

"ப்ரபோ! தாங்களா? தூக்கமயக்கத்தால் ஏதேதோ உளறிவிட்டேன். பொறுத்தருள்க.

தோடுடைய செவியா போற்றி
திங்கள் அணிசடையா போற்றி
திரிபுர தகனா போற்றி
தில்லைவாழ் நடேசா போற்றி"

"நிறுத்தப்பா, நிறுத்து. காலைமுதல் மாலைவரை என்காது குளிரப்பாடினாயே அதுவேபோதும். உன்தோத்திரம் கேட்டு மகிழ்ந்தே, உன்னைக்கைலாயம் அழைத்துச்செல்ல வந்துள்ளேன். எழுந்திரு"

"ஆண்டவனே! இதென்ன வார்த்தை! என்னை அழைத்துப்போகப் போகிறீரா?"

"ஆமாம்! ஏனப்பா, பதைக்கிறாய்? உத்தமபக்தனுக்கு நாம்தரும் இடம், பனியும் பரிமளமும் மிகுந்த, கைலாய மன்றோ! எவருக்கும் சுலபத்திலேகிடைக்காத இடமன்றோஉனக்குக்கிடைக்கஇருக்கிறது. நமது திருவடியைப்பற்றிக்கொள், புறப்படுவோம்"

"பிறைசூடி! ஒரு விண்ணப்பம். எனக்குக் கைலாயப்பிரவேசம், இவ்வளவு சீக்கிரத்திலே கிடைத்து விட்டால், சைவம் தழைக்காது."

"இதென்னப்பா, புதிதாக இருக்கிறது உன்மொழி"

"மெய், என்னப்பனே! நான், நால்வரைப்போல உம்மைமனமார, நாவாரத் துதித்துத் தேனொழுகும் பாட்டிசைத்தேனா? கண்ணப்பர் போலக்கண்ணைப் பெயர்த்தளித்தேனா? சிறுத்தொண்டனா, இயற்பகையா? எளியேன், என்னசெய்தேன், இப்பெரும் பேறுபெற. மிகச்சாதாரணச் சைவனான நான், சிவலோகம் புகுந்தேனென்றால், யாவரும், என்னளவோடு சைவத்தை நிறுத்திக்கொள்வர், பிறகு சைவம் தழைக்காது. ஆகவேதான், இன்னம் பல ஆண்டுகள், நின்புகழ்பாடி இங்கு இருந்து உழல்வேன், இது சமயம், என்னைக்கைலாயத்துக்குஅழைக்காதீர், கங்கையுடைசடையா, காலனைக் கொன்றவா, கரிமுகன் தந்தாய்!"

"தந்திரமாகப் பேசுகிறாய், இங்கேயே இன்னம் கொஞ்சநாட்கள் தங்க! ஆனால் பக்தனே! உன்னைஅழைத்துச்செல்லா விட்டால், என்புகழ்மங்கும். சைவம் கெடும்"

"சைவம் கெடுவதெவ்வண்ணம்"

"இப்பெரும் பக்தர், பாகாய் உருகினார், பாபல பாடினார், பரமனைத்தேடினார், பலப்பலசொல்லி வாடினார், ஆனால் அரனேவந்தாரில்லை, அடியனைக் கைலை அழைத்துச்சென்றாரில்லை, எனவே, சைவம் சாறற்றது, வேறு ஒரு மார்க்கம் தேடுவோம், என்று, மக்கள் எண்ணிடக் கூடும், அது சைவத்தை அழித்திடவுங் கூடும், ஆகவே சிவநேசச்செல்வனே! சீக்கிரம் புறப்படு!",

"முடியாது! வரமாட்டேன்! முடியவே முடியாது"

பக்தர்போட்ட இந்தப்பயங்கரக் கூச்சலைக் கேட்டுப்பக்கத்திலே படுத்திருந்த அம்மையார், பயந்தெழுந்து, 'உளறிப்புரளும் புருஷரின் முகத்திலே நீர் தெளித்து, எழுப்பிட, கனவுலகினின்றும் எழுந்த, சைவப்பெரும் புலவர், சிரித்தார்.

"நல்லா சிரிச்சீங்க, போங்க! பதறிப்போயிட்டேன், நான் பலநாளா சொல்றேனே, கேட்டாத்தானே, காலைக்காவது நல்ல டாக்டரிடம் காட்டுங்க" என்று அம்மையார் கூறினார். அவரோ, சிரித்துக்கொண்டு, "அபத்தியக்காரி! சொப்பனம் கண்டேன் வேறொன்று மில்லை, சாட்சாத்சிவபெருமான், பிரத்யட்சமாகி ......" என்று கூறிமுடிப்பதற்குள், அம்மையார், கைகூப்பியபடி, "இன்றோடு நம் கஷ்டம் தீர்ந்துவிடும். உங்கதம்பிக்கு இருப்பது போல, நிலமும் செல்வமும் அருளமாட்டாரா? கேட்டீர்களா இல்லையோ!" என்றுகூறினாள். "அவராகவந்தார். வந்தது மட்டுமல்ல, வாடா! கைலாயத்துக்குஎன்று என்னை அழைத்தார்" என்றார் சிவபக்தர். "ஐயோ! என்கதி" என்று அம்மை அலற, அவர், அம்மையை இறுகத்தழுவிக்கொண்டு, "நான் இப்போது வரமுடியாது" என்று கூறினேன். பாம்பை என்மீது ஏவினார் பயந்துகூவினேன், நீஎழுப்பினாய், கனவும்கலைந்தது" என்று கூறித்தேற்றினார்.

(2ம் பக்கம் பார்க்க)

# கதிரேசருக்கு!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இதென்னப்பா, கப்சா! எந்தச் சைவர் இப்படிப்பட்ட அனுபவம் பெற்றார்" என்று நான் வீரனைக்கேட்டேன். வீரன், "பரதா! உனக்கு இந்தத்தமிழ் இசையை எதிர்ப்பவர்கள் போல, அவசரம் அதிகமாக இருக்கிறது. நான் இன்ன ஊரிலே, இன்னசைவருக்கு, இப்படி நடந்தது என்று சொன்னேனா? முழுவதும் கேளாமுன்னம் குறுக்குச்சால் ஓட்டாதே" என்று கடிந்துரைத்துவிட்டு, மேலே கூறத்தொடங்கினான்.

"பரதா! கேள்! சிவநேசச் செல்வர்கள், சிவனருள்கோருகிறார்களேயென்பதற்காக, நான்சொன்னபடி, சிவனாரே நேரிலேவந்திருந்து, வா, கைலாயத்துக்கு என்று அழைத்தால், சைவப்பெரியார் எவரேனும்போகச் சித்தமாக இருப்பர் என்று நீ கருதுகிறாயா?" என்று கேட்டான். வீரனின் இக்கஷ்டமான கேள்விக்கு விடையிறுக்க நான்யோசித்தேன். ஏன்! நமது சைவஅன்பர்களுங்கூடத் தான் யோசிப்பர். என்அறுபதாம் ஆண்டிலே திரு. வி. க.வுக்கு நடந்ததுபோல நடக்கவேண்டாமா அதுவரை பூலோக வாசமேவேண்டும் என்று கைலாசவாசனைவேண்டும் சைவர்களும், திருவிளையாடற்புராணத்துக்கு நான் தயாரிக்கும் புதுவிளக்கப்பதிப்புமுடியட்டுமே, என்று வாய்தாகேட்பவரும், உன்னைக் கண்டபெருமையைஉலகுக்குக்கூறி, உள்ளவரனைவரையும்சைவசமயத்தவராக்கிவிட்டுப் பிறகே வருவேன் என்று உறுதிகூறுவோரும் இருப்பரேயன்றி, ஓடிவந்தேன் என்று அந்த ஓடப்பர் பின்னால்செல்லும்சைவபக்தர் எத்தனை பேர் கிடைப்பரோ, யானறியேன்; சிவநெறியின் தன்மையைத்தெரியாத சிறியேன்!

வீரன் சொன்னான், "பரதா! தூத்துக்குடியில் சென்ற திங்கள் இறுதிக் கிழமைகூடிய சிவநேசச்செல்வர்கள், இத்தகைய நெருக்கடி, சைவர்கட்கு நேரிடா வண்ணம், பாதுகாப்பான பிரார்த்தனை செய்தனர்," என்று.

"அது என்னப்பா, பிரார்த்தனையிலே புதுரகம்?" என்று நான் கேட்டேன். சைவம் முற்றிவிட்டது என்றுஎண்ணிச் சிவனார், எங்கே தங்களைக் கைலாயம் அழைக்க வந்துவிடுகிறாரோ, என்று பயந்த "பக்தர்கள்" ஒரு பாதுகாப்புத் தேடிக்கொண்டனர். என்ன தெரியுமோ! இறைவா! எங்கள் சபையும், அதன் அங்கத்தினராம் சிவநேசச்செல்வர்களும் நீடூழிவாழ அருள்புரிக! என்று பிரார்த்தித்தனர். இதுமுற்றிலும் புதியமுறை. பிறவாவரம் தாரும்—திருவடியிலே சேர்த்துக்கொள்ளும்,—அங்கே நானும் வர வேண்டுகிறேன்—முக்தி தாருமய்யனே—என்று, பக்தர்கள் முறையிடுவது பழய முறை! இப்போது, நீடூழிவாழ அருள்புரி என்பது புதுமுறை. சிவனார் சம்மன் அனுப்பிக் கைலாயத்துக்குஆஜராகும்படிசொன்னால் என்னசெய்வது, மனையும்மாடும், மகனும் மணியும், எடும் மைக்கூடும், மேடையும் பரிமளவாடையும், திலகமும் திலகவதியரும், திருவும் திருநடனமும், விட்டு, கைலாயம்சென்று, வாழ, இன்றையச் சைவர்கட்கு இஷ்டமில்லை. ஆகவேதான், சிவனே! நாங்கள் நீடூழிகாலம்வாழஅருள்புரிக, என்று வேண்டினர். இதுதான், பாதுகாப்பான பிரார்த்தனை!" என்றான்வீரன். விஷயம் புரியலாயிற்று. தூத்துக்குடியிலே, பேராசிரியர், அவருக்குப் பிரியமானமுறையிலே கூறவேண்டுமானால், மகாமகோபாத்தியாயர்பண்டிதமணி. (ஒளியா, ஒலியா, இரண்டுமா என்பது என் ஆராய்ச்சியல்ல) கதிரேசன் செட்டியார் அவர்கள் தலைமையில்கூடிய, சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழாக் கூட்டத்திலே, அவராற்றிய சொற்பொழிவின் இறுதியிலே, சிவநேசச்செல்வர்களை, நீடூழிவாழஅருள்புரியுமாறு சிவனாரை வேண்டினார், என்று மித்ரன் தெரிவிக்கிறது. வீரன் விளம்பியபடி, இந்தஅநித்யமான, மாயமான, காமக்குரோதாதிகளிடம் சிக்கிச்சிதைவதான, பேய்த்தேர் போன்ற இவ்வுலகிலே, நீடூழிவாழ,வாழ்க்கையின் நிலையாமையையும், இகத்தின் இன்னலையும், பரத்தின்மேன்மையையும், நன்குஉணர்ந்த சைவர்கள், ஏன் விரும்ப வேண்டும் என்பது எனக்கு ஆச்சரியமாகத்தான்இருந்தது. வீரனின் கேலிச் சித்திரத்திற்குக் காரணமும், அவர்களின் பாதுகாப்பான பிரார்த்தனைதான்!

உண்மையாகவே, சிவனாருக்குக்கூட, வேறுவேலை இல்லாதிருப்பின் இதேசிந்தனை பிறந்திருக்கும். இதுவரை எல்லாப் பக்தர்களும், நம்மிடம் வந்துசேர்ந்துவிடப் பிரார்த்தித்தனரே, இந்த நவீனச் சைவர்கள். நிலஉலகிலே நீடூழிவாழ அருள்தேடுகின்றனரே, காரணம் என்னையோ, என்று யோசித்திருப்பார்.

நீடூழிவாழவிரும்பும் நேயர்கள், ஒரு காலம்குறிப்பிடா விட்டால் அருள் கிடைக்குமோ கிடைக்காதுபோமோ என்ற ஐயப்பாட்டால், ஒரு குறிப்பும் கூறியுள்ளனர். "உலகத்திலே அனுபவித்து அலுத்துவிட்டேன். வயதும்ஆகிவிட்டது, சாவுக்கு நான் பயப்படவில்லை. ஆனால், என் பேரனுக்கு ஒருகலியாணம் செய்து பார்த்துவிட்டால், திருப்தியாகக் கண்ணை மூடிக்கொள்வேன், என்று கூறும் கிழவர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். அதுபோலவே, தூத்துக்குடியிலே கூடிய சிவநேசச்செல்வர்கள், "இரங்கத்தக்க நிலையிலேஉள்ள" சிலர் திருந்துவதைக் காணுமட்டும், இங்கு வாழவிரும்புகிறார்கள். அறிவிழந்து, மதமிழந்து, சிவநெறியிழந்துகிடக்கும் சிலமாக்கள் மக்களாகும்வரை, இந்த "மகான்கள்" இந்த மண்ணிலே வாழவேண்டுமென்று விரும்புகிறார்கள். தங்கள்பொருட்டல்ல, தவறியோரைத் தடுத்தாட்கொள்ள! கதிரேசர் தலைமையிலே கூடியவர்கள் கருணேசர்கள்! ஆமாம்!! யார், அத்தகைய திருத்தப் படவேண்டியவர், என்பீர். கேண்மினோ!

"நம் சமய நெறிபற்றிய அரும்பெரும் நூற்களஞ்சியங்களையும், சமய உண்மைகளையும் நம் பண்டையோர் நமக்கு உதவியிருப்ப, அப்பொருட் பயன்களையடையாது, பெரியார் பெரு நன்றியைமறந்து, அன்னாரையும் அவர்தம் உண்மைகளையும் இகழ்ந்து, மக்கட்டன்மையிலிருந்து விலங்குத் தன்மைக்கு ஈர்த்துச் செல்லுமியல்பில் நடந்துவரும் நம்மனோரிற் சிலர் கொள்கை இரங்கத்தக்கதேயாம். இப்பிறழ்ச்சிகள் யாவும் ஒழிந்து, நன்னெறிப்பட்டு, கல்வியினும் சிறந்த சமயக்கண்கொண்டு உண்மைக் காட்சியைத் தெளிவுறக்காண்டற் பொருட்டு இச்சபையையும் இதனுறுப்பினராம் சிவநேசச்செல்வரும் நீடூழி வாழச் சிவபிரான் அருள்புரிக'. என்றுரைத்தாராம் கதிரேசர். அரகர நமப்பார்வதிபதயே நமா! என்ற கோஷம் கைலாயத்தையுங் கலக்கிவிட்டிருக்கக்கூடும். ஆனால் ஒரு விஷயம், அரன் அருள் புரியட்டும், சிவநேசச்செல்வர்கள் நீடூழி வாழட்டும், அவர்கள் இங்கு வாழ்ந்துவருவதைச் சிவனாருக்குக்கூற, இரங்கத்தக்க நிலையினரான நம்மனோரிற் சிலரை முன்கூட்டியே அனுப்பிவைக்கட்டும், அவைகளைப்பற்றியான் குறைகூற முன்வரேன்! ஒன்று எனக்குத்தெரியவேண்டும், அரும்பெரும் நூற்களஞ்சியங்கள்யாவை? அர்த்தமில்லாத ஆபாசம் நிரம்பிய அந்தக் கதைகள் மக்களை விலங்குத்தன்மைக்கு இழுத்துச்செல்லுமா, அன்றி, அந்தஆபாசத்தை ஒழிக்கவிரும்புவோர் விலங்குத் தன்மைக்குப்பிறரை ஈர்த்துச் செல்கின்றனரா? ஈர்த்துச்செல்கின்றனர் என்றால், யாரை? சிவநேசர்களுமா, ஈர்த்துச்செல்லக்கூடியநிலையிலுள்ளனர்? இரங்கத்தக்க நிலையிலுள்ளவர்களுக்கு நல்லறிவு தருமாறு அரனைவேண்டுவதுமுறையாக இருக்க, உண்மைக்காட்சியைத் தெளிவுறக் காண்டற்பொருட்டு எம்மை நீடூழி வாழச்செய்யவேண்டும் என்று அரன் அருள் வேண்டுவது முறையா, அம்மையப்பனைக்காணும் காட்சி இன்பத்தைவிடவா இது சிறந்தது என்ற சந்தேகங்களைச் சிவநேசர்கள் போக்குவாரானால், சிவநெறி பரவுவதற்கு வழிசெய்வதுடன் அறிவு பரவவழிகோலியவராவர்.

கதிரேசரே! காயாதுகேண்மின், ஒழுக்கத்திற்குச் சமயம் அவசியம் என்று புகன்றீரே, ஒழுக்கத்தைச் சமயம் நிலைநாட்டிவிட்டதா? சுயமரியாதைக்காரர்கள், உமது பாஷைப்படி கூறுகிறேன், இரங்கத்தக்க நிலையிலுள்ளோர், தோன்றிச்

(7-ம் பக்கம் பார்க்க.)

# மோட்டார் மன்னரின் கொடை!

## கவர்னரின் பாராட்டுரை!

## "இவர் ஒரு நப்பீல்டு"

நமது திராவிடமணி, மோட்டார் மன்னர் தோழர் G. D. நாயுடு அவர்கள், கடந்த 25 ஆண்டுகட்கு முன்பு மிகச்சிறிய முறையிலே துவக்கிய, தொழில், இன்று தென்னிந்தியாவிலே பெரியதோர் அமைப்பாகிவிட்டது. இதனால் கிடைத்த பெருந்தொகையான இலாபத்தை, நண்பர் G. D. நாயுடு அவர்கள் தமது சுகபோகத்துக்குச் செலவிட்டாரில்லை. ஏழைகளின் துயர் துடைக்கவும், தொழிலாளர் கஷ்டத்தைக் குறைக்கவும், விஞ்ஞானம் வளரவுமே செலவிட்டுள்ளார்! **இலட்சத்து ஆயிரம் ரூபாய் யுத்தநிதிக்கு நன்கொடையாகத் தந்துள்ளார்.** இதுவன்றி **10 இலட்சம் ரூபாய், பாதுகாப்புப் பத்திரங்கள் வாங்கியுள்ளார்.** இந்தப் பாண்டுகளின் தொகையைத் தமக்காக வைத்துக்கொள்ளாமல், பொதுநலனுக்கு நல்கியுள்ளார். அந்தப் பெருங்கொடைப் பட்டியலைக் கீழேதந்துள்ளோம்.

U. M. S. கம்பெனி தொழிலாளர் சுகாதாரம் கல்வி முதலியவற்றுக்கும், அவர்தம் முன்னேற்றத்திற்கும் 1,50,000.

மாகாணத்திலுள்ள தொழிலாளர் சுகத்திற்காகச்செலவிட 1,00,000.

ஆதித்திராவிட வகுப்பைச் சார்ந்த தொழிலாளர் நலனுக்காக 50,000,

U. M. S. கம்பெனியிலே 15 வருடத்திற்குமேல் வேலைசெய்துவந்துள்ளவர்களுக்குப் பரிசுத் தொகையாக 20,000.

ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் பாடுபட ஒரு பத்திரிகை துவக்கி நடத்த 50,000.

ரேடியோ, மோட்டார் தொழிற்சாலை துவக்க, U. M. S. கம்பெனிக்கு 2,00,000.

கோவை ஜில்லாவிலுள்ள, அல்லது வெளிஜில்லாவிலிருந்து கோவைஜில்லா வந்திருந்து மூன்று வருஷங்களுக்குக் குறையாது வேலைசெய்த போலீஸ் கான்ஸ்டேபில்களின் பிள்ளைகள் 10 பேருக்கு உயர்தரக் கலாசாலைப் படிப்புக்குச் செலவிட 50,000.

[இதற்கான சர்க்கார் பத்திரம், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் இருக்கும்]

பச்சையப்பன் கல்லூரியிலே ரேடியோ ஆராய்ச்சிச்சாலை நிறுவ 25000

ரேடியோ சம்பந்தமான ஆராய்ச்சிக்காக ஆந்திரா சர்வகலாசாலைக்கு 10,000

மோட்டார் விஞ்ஞானத்தொழிலில் நிபுணராகவிளங்கும் மூன்று மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்க, சென்னை இராமகிருஷ்ண வித்யாலயத்தாருக்கு 25,000

"இங்கிலாந்து நாட்டிலே நப்பீல்டுபிரபு போல, இங்கு G. D. நாயுடு அவர்கள் இருக்கிறார். இவரது பெருங்கொடைகண்டு இந்தியாவிலுள்ள மற்றச்சீமான்களும் ஏழைகட்கு இதம்புரியவேண்டும்" என்று மே. த. கவர்னர் அவர்கள், தோழர் G. D. நாயுடு அவர்களைப்பாராட்டிப் பேசியுள்ளார்.

U. M. S. கம்பெனி நிர்வாகத்தை, தோழர் L. R. G. நாயுடுவசம் ஒப்புவித்துவிட்டுத், தோழர் G. D. நாயுடு அவர்கள், பொதுத்தொண்டுபுரியவும், போர் ஆதரவுக்கான பணிபுரியவும் உத்தேசித்து, தமது தொழிலிலே கிடைத்த பெருத்த இலாபத்தைப் பொது நலனுக்கு வழங்கினார்.

இதற்கான விழா ஜனவரி 9ந்தேதி, கோவையிலே, தோழர் G. D. நாயுடு அவர்களின் "கோபால் பாக்" பங்களாவிலே நடைபெற்றது.

மே. த. கவர்னர் பிரபு பிரசன்னமாக இருந்தார். தோட்டக்கச்சேரிக்குச் சர். R. K. சண்முகம், பெரியார் இராமசாமி, ஊத்துக்குழி ஜெமீன்தார், L, R. G. நாயுடு, முதலிய பிரமுகர்களும், பிரபல அதிகாரிகளும் வந்திருந்தனர்.

ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்திவரும் தோழர் G. D. நாயுடு அவர்கள் அளித்துள்ள இந்த நன்கொடைகட்காகத் திராவிடம், பெருமை கொள்கிறது. அழியாப் புகழ்பெற்ற நமது அன்பரின் பெருங்குணத்தைத் திராவிடம் பாராட்டுகிறது.

செல்வத்தை ஈட்டி, அதைத்தேக்கிவைத்தோ, அல்லது சுயநலசுகபோகக்குழிக்குச்சேருக்கியோ புரளும் செல்வவான்கள் மலிந்துள்ள நாட்டிலே, பாலைவனத்து நீரோடைபோல, நண்பர் G. D. நாயுடு அவர்கள் விளங்குகிறார். வாழ்க மோட்டார் மன்னர்! வளர்க அவரது வளம்!!

# திராவிட நாடு

காஞ்சி 16—1—44 ஞாயிறு


## பொங்கற் புதுநாள்

★

பொங்கற் புதுநாள்எனும் விழாமணம் சூழ்ந்துள்ள வேளையிலே, இக்கிழமை இதழ் உம்மிடம் வருகிறது, இன்றுபோல் என்றும் இன்புற்று வாழவேண்டும்,என்ற நன்மொழிகூறிக்கொண்டு, விழாவிலே வழியும் மகிழ்ச்சிப் பெருக்குத் தமிழரின் மனைதோறும், என்றும் தங்குக என்ற வாழ்த்துரை கூறிக்கொண்டு, பொங்குக இன்பம், தங்குக எங்கும் என்றுரைத்துக்கொண்டு. ஆடவரும் பெண்டிரும் சிறுரும், என், சிற்றினமாம் கால்நடைகளுங்கூடப்புதுக்கோலத்துடன் விளங்கும் விழாவை இனிதுமுடித்தீர்கள். பொங்கற் பானைகளிலே படிந்த கரிப்பூச்சுக் கலையவில்லை. வெண்சுண்ண ஒளியும் செம்மண் அழகும் சிதையவில்லை, புத்தாடையின் கஞ்சிவாடையும் புன்முறுவலும் போய்விடவில்லை, காய்கறிக்குவியலும் முழுதும் செலவாகிவிடவில்லை. குடும்பத்தைவிட்டு வேற்றூர்சென்றுபணிமனைபலவற்றிலே உழைக்கும், மக்கள், மனஅறமுறைப்படி, விழாவுக்காக வந்துள்ளனர். காண்போர் களித்து, நலன் விசாரிக்கும் நற்பண்பு நடந்தவண்ணமிருக்கும் நாளிலே, திராவிடத்தைத்தன் குடும்பமெனக்கருதும், ஏடு, உங்களைநாடி வந்துளது, "என் சிந்தனையும் செயலும் சரிவரஉளதா" என்று உம்மைக்கேட்க, ஆம் என்று நீவிர்கூறிடின் அகமகிழ.

இவ்வாண்டு, பொங்கற்புதுநாள் விழா, போர்க்காலத்தது. ஆம்! சில ஆண்டுகளாகவே, போர்ச்சுழலிலேயேதான் நாம் உள்ளோம். அளவரசிக்காலம்! மூடியிட்ட விளக்குகளும், சீலிட்ட வேட்டிச் சேலைகளும், உள்ள காலம்! ஆனால், இவ்வளவுக் கிடையே, செந்நெற்குவியலையும் பச்சைக் காய்கறிகளையும், பாலையும் தேனையும், நாம் உண்டுகளித்தோம், புத்தாடை பூண்டு, புனலில் குளித்து, புன்முறுவலுடன்! இதே நேரத்திலே, மலையுச்சியிலே, பனியிலே நின்று, ஜெர்மானியருடன் போரிடும் தமிழ்வீரர்கள், இத்தாலியிலே, பலர் உள்ளனர், அங்கு பொங்குவது, பால் அல்ல, இரத்தம், அவர்கள் காண்பது, பாற்சாதம்செய்ய நமது பாவையர் மூட்டும் அடுப்பிலிருந்து சுருண்டுவளைந்து பாம்பெனஎழும்பும் புகைமணமல்ல, வெடிகுண்டு, எரிகுண்டு வீச்சால் எழும் புகை நாற்றமும், வீழ்ந்த வீரரின் உடலிலிருந்து கிளம்பும் பிணவாடையும்! அவர்களின், குடும்பங்களிலே இந்தப் பொங்கற்புதுநாளன்று, பூரணமகிழ்ச்சி இருந்திருக்க முடியாது. ஈராக், ஈரான், மால்ட்டா, சைப்ரஸ், மாயூநதிமுனை போன்றபல்வேறு இடங்களிலே, தமிழகத்தின் வீரர்கள், இவ்வாண்டு உள்ளனர். அவர்களின் வீரத்தியாகத்தால், நாட்டுக்கு நன்மதிப்பு இன்று பொங்குகிறது! அவர்களின் குடும்பத்தினரை, நாம் மறக்கவில்லை. அடுத்த பொங்கலன்றேனும் அவ்வீரர்கள் வீடுதிரும்பி, புகைசூழ்ந்த அடுப்பருகே அமர்ந்து, போரிலேதாமாற்றிய செயல் பலவற்றைக்கூறவும், தாயும் தந்தையும், வயோதிகத்தை இம்மகிழ்ச்சியால் வாலிபமாக்கிக் கொள்ளவும், அண்ணன் தம்பியும், அக்காள்தங்கையும், மணி தோன்றிய மனையிலே நாம் தோன்றினோம் என்று களிப்பெனும் கலாபத்தை விரித்தாடவும், காதலனின் பெருமைதனைக்கேட்ட களிப்பால் தன்னைமறந்து, வெண்டைக்குப் பதில் காலில்உள்ள தண்டையைத் தொட்டும், உலர்ந்தபுல்லைஅடுப்பில் இடுவதற்குப்பதில் நெல்லையிட்டும், கெண்டைவிழியால் அவனைத்தாக்கிடும் கோமளவல்லிகளும், கூடிப், பொங்கற் புதுநாள் கொண்டாடவேண்டும், என்று நாம் விரும்புகிறோம்.

அறுவடை எனும் அகமகிழ்ச்சிக்கான அறிகுறியே இப்பொங்கல்விழா. உழைத்துவாழு என்ற உத்தம இலக்கண போதனையை ஊட்டும்விழா, திருந்திய வயலிலே மணிகொழிக்கும் என்றபாடத்தை நல்கும் விழா! இவ்விழாவை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடிய மாண்புடைத்தமிழருக்கு, வாழ்வு முழுதும், வளமும் வகையும் பொங்கட்டும், என்ற நல்லெண்ணத்தையன்றி, வேறென்னதான் தேவை! நாம் வேறுஎன்னதரமுடியும், பொங்குக மகிழ்ச்சி, தங்குக எங்கும்!!

## மற்றோர் பரணி!

சற்றேவிலகியிரும் பிள்ளாய், சன்னிதானம் மறைக்குதாம், என்று மகேசுவரன், கூறினதுகேட்டு, வழிமறைத்திருந்த மாடு, விலகிற்றும்! முடியாது என்றுகூறியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பது பழமையிலே புரளும் சிலபண்டிதர்கட்கு அடுத்த ஆராய்ச்சியாகஇருக்கட்டும்என்று விட்டுவிடுகிறோம். வழிமறைத்திருக்கும் வர்க்கத்தைச் சென்ற திங்கள் வாருகோலால் சர். சண்முகம் சாடினார் அண்ணாமலைப்பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாச் சொற்பொழிவிலே! விலகிநில்லும்பிள்ளாய், என்று வினயமாக உரைத்ததோடு விட்டாரில்லை, சர். சண்முகம், எட்டநில்! முட்டவருகிறது ஜனநாயகம்! என்றுஎச்சரித்தார். அவர்பரணி பாடியதுபோலவே இந்தத்திங்கள்ஜெயப்பூர் சமஸ்தானத்திலேகூடிய எல்லா இந்தியாக்கல்விமாநாட்டிலே தலைமை வகித்த, டெல்லி சர்வகலாசாலை வைஸ்சான்சலர், சர். மாரிஸ்குவையர், பழமை ஒழிக! ஜாதிக்கொடுமை அழிக! தீண்டாதாரைத்தீய்க்கும் தீயர் ஒழிக! என்ற பரணிபாடினார். அறிவு பொதுவன்றோ!

ஜாதிக்கொடுமை புரியாதீர்! தீண்டாதவர் என்று ஒரு வகுப்பினரை அக்ரமமாக ஒதுக்கிவைக்கிறீர்கள். இது நல்லதல்ல, நியாயமல்ல. இது நிலைக்காது. சாதாரணமக்களும், சரிசமமாக வாழவேண்டும், என்று உரிமைகேட்கும்காலம் வரப்போகிறது விரைவிலே. அதற்குள் இந்த அநீதியைத்துடைத்துவிடுக. நீங்களாக இந்த நேர்மையான செயலைச்செய்யாது விடுவீர்களானால், தாழ்த்தப்பட்டு, அடக்கப்பட்டுள்ள மக்கள், நாளையத்தினம், தங்கள் விடுதலைக்கான மார்க்கத்தைத்தாமாகவே தேடிக்கொள்ள முற்படுவர். அப்போது நிலைமை, உங்களால் கட்டுப்படுத்த முடியாததாகும்—என்பதாக, சர். மாரிஸ்குவயர் பேசினார். உண்மை. சேரிகளிலிருந்து கிளம்பிய அழுகுரல், வேத ஒலியிலே இலயித்துள்ள மக்கள் செவியிலே புகவில்லை. அபிஷேக ஆராதனையிலும், அரசியல்அமளியிலும், கவிதா ஆராய்ச்சியிலும் காலந்தள்ளும்மக்களுக்கு இன்னமும் அக்ரமமாகப் பலகோடிமக்களைக் கேவலப்படுத்திவிடுவதன் விளைவு என்ன என்று சிந்திக்கநேரமில்லை. ஆனால் அவர்களை நோக்கிப் புதுவேகத்துடன் விரைந்து வருகிறது புரட்சித் தீ! அது பூசுரரின் தாட்சணியத்துக்குக் கட்டுப்படாது, பூமான்களின் தயவுக்குக் காத்துக்கிடக்காது, புலவரின் மேற்கோள்களுக்கு அச்சாரம் அளிக்காது, நெடுநாளைய இடுப்புவலியை நீக்கிக்கொள்ளமுற்படும், உடலமும் உள்ளமும்ஒருங்கேபதற விடுதலை! விடுதலை! என்ற பெருமுழக்குடன் பவனிவரும்! அந்தப் பவனியின் முன் பாராளும் மன்றங்கள் குறுக்கிட முடியாது, பண்டை ஏடுகள் அதன் பாதையை அடைக்கமுடியாது, எதிர்ப்பை அது சட்டைசெய்யாது, தீ, திக்கெட்டும் பரவும். சர். மாரிஸ், கூறுவது, உலகிலே, விவேகம் குறைந்தால் நேரிடக்கூடிய விளைவு என்ன என்பதுதான். ஒவ்வோர் உலக அமளிக்குப்பிறகும், உள்நாட்டிலே கொடுமைகளைக் களையும் வேலை விறுவிறுப்புடன் நடந்தே வந்திருக்கிறது. இங்கும், அது நடந்தேதீரும், ஆனால் நல்லோர்உரை கேட்கும் நற்போக்குக்கு நாட்டினர் இடமளித்தால், சாந்தியுடன்கூடிய சமரசம் நிலவச்செய்திடமுடியும். சர். மாரிஸ்குவயரின் பாணியைச், செவிமடுக்க, வைதிக உலகு, ஜாதி அகம்பாவத்திலே தன்னை மறந்திருக்கும் உலகு, முன்வருமா, அன்றி, வழிமறைத்திருந்து, வழிந்தோடிவரும் புரட்சி வெள்ளத்திலே சிறுதுரும்பாகிச் சீரழியுமா, என்பதைச் சிந்திக்கும் பொறுப்பு அந்தச் சிலர்கட்கே உரியது. நமக்கிருக்கும் மகிழ்ச்சி எல்லாம் உண்மையிலேயே அகில இந்தியாவுக்கும் அவசியமாகவேண்டிய கல்வியை, சமரச ஞானத்தை, ஜாதிவெறியைச் சாகடிக்கும் சமஉரிமைப் போதனையை, சர், மாரிஸ், தக்க நேரத்திலே போதித்தாரே என்பதுதான். உயர் ஜாதிக்காரர்களின் உள்ளத்திலே ஒரு

அசட்டு நம்பிக்கை இருக்கக்கூடும். இவ்வளவு 'யுகங்களாக' வளர்க்கப்பட்டவைதீக விருட்சத்தை, இவ்வளவு சுலபத்திலே வெட்டிவீழ்த்தமுடியுமா, நடவாது என்று அந்தக்கூட்டம் மனப்பால்குடிக்கக்கூடும். மமதையின் கூட்டுத்தோழன், அசட்டுத் தைரியம், அது அழிவுக்குத்தூதனேயன்றி வாழ்வுக்கு வழிகாட்டியல்ல.என்னசெய்ய முடியும், என்ற மனப்பாலைக்குடித்துக் கொண்டிருந்த ஜாரின் கதிஎன்ன! பட்டாளமும் பணபலமும், பூஜைக்கூட்டமும் ஜாருக்கு, சுடலைத்தோழராக முடிந்ததேயன்றி, பக்கபலமாக நிற்கவில்லை. இங்கு, தீண்டாதாரை அடக்கும் திருக்கூட்டத்திடமோ, காய்ந்த ஓலையும் கந்தல் புத்தகமும், தவிரவேறென்ன உண்டு!!

சர். மாரிஸ்குவயரின்பாணி, கேட்ட பின்னராவது, ஜாதி அகம்பாவத்தை ஒழிக்க, அறிவுடையோர் அறப்போர் நடத்தவேண்டும், அழிவு ஆர்ப்பரிக்கு முன்னம்!!

## வாழ்க! வருக!

பீரங்கி வேட்டும் பிணக்குவியலும், இரத்தஆறும் இராஜதந்திரச்சேறும், நிரம்பிய, அமளியின்நடுவே, அகமகிழ்ச்சிதரும், செய்தி! லெபனன், சிரியா, எனும் நாடுகள், பிரன்சு மேற்பார்வைஎனும் அடிமைத்தளையினின்றும் நீங்கிச், சுதந்திர நாடுகளாயின!! சிறுநாடுகளின் சுதந்திரத்திலே நேசக்கட்சியினர், செயலாற்றத் தொடங்கினர், என்பதற்கு இஃது தக்கதோர் சான்றாகும். ஒருநாடு மற்றோர் நாட்டினைஆள்வது, இயற்கைஅறத்திற்கும்முரண், மனிதாபிமானத்துக்கும் ஒவ்வாதது, ஆளப்படும்நாட்டினை அரிக்கவும் ஆளும்நாடு ஆணவத்தால் அழியவும், இருபக்கமும்கூருள்ள கொடியசுட்டிபோன்றது! லெபனன், சிரியா, சுதந்திரச் சுடரொளியைப்பெற்றன என்பதுகேட்டுப், பண்டைய நாட்களிலே பண்புடன், தன்னாட்சியுடன்விளங்கி, இன்று, ஆங்கில ஆட்சிக்கும் ஆரியச் சூட்சிக்கும் வடநாட்டாரின் வணிகவலைக்கும் இடமளித்து இடருறும் திராவிடநாடு, நாளைநமக்கும் இதுபோல விடுதலைகிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், தன்னாட்சிபெற்ற இருஇடங்களையும் வாழ்த்துகிறது! தன்னாட்சி தத்திவிளையாடும்நேரத்திலே, இடறிவிழக்கூடும், பக்குவம்தேவை. தாலாட்டுவோரின்திறமையும், வளர்ப்போரின் வண்மையும், அவசியம். ஆயினுமென்ன? சிறுகுழவியின் மழலைபோல, லெபனனின், சிரியாவின்சொல், விடுதலைவிரும்பிகளின் உள்ளத்தைக்களிப்பூட்டும். பிள்ளை விளையாட்டுச்செயல்புரியினும் பெரியோர் தக்கதுரைப்பதுபோல, நீண்டநாளாகச்சுதந்திரத்தைப் பெற்றுள்ளதேயங்கள், புதியஒளிபெற்ற இடங்களுக்குத் துணைநிற்கவேண்டும்! வாழ்க லெபனன்! வாழ்க சிரியா!! வருக திராவிடத்தனிஅரசு! வெல்க, திராவிட உரிமைப்போர்!!

## ஆயிரம் கோடி!

1943 டிசம்பர் மாதம் வரையிலே, இந்தியாவுக்கு வெளி உலகிலிருந்துவரவேண்டிய பணம், சுமார் 853 கோடி ரூபாய் என்று கணக்கெடுத்திருக்கின்றனர். இந்தப்போர் முடியுமுன், ஆயிரங்கோடிரூபாய், எனும் அளவினதாக இத்தொகை வளரக்கூடும். போரின் காரணமாக நமதுமக்கள், எவ்வளவோ கஷ்டங்களைச் சகித்துக்கொண்டுள்ளனர். இவ்வளவு கஷ்டத்திற்கும் பலன் ஏற்படாது போகவில்லை. நாட்டுவிடுதலைக்கு நாம் தகுதிபெறுகிறோம், நாட்டுப்பாதுகாப்புக்கான போர்த்திறனைப், பல இலட்சக்கணக்கான மக்கள் பெறுகின்றனர், வெளிஉலகத்தொடர்புஉன்னதமான விதத்திலே வளருகிறது, இவ்வளவுடன் போர்க்குத்தேவையானபொருள்களை விற்றவகையிலே, இந்தியாவுக்கு ஆயிரம் கோடிரூபாய், கிடைக்கும் நிலைமையும், புதியபல தொழில், வளமாகக்கூடியவகையும் ஏற்படுகிறது. வாழ்க்கையின் கஷ்டத்தால் சிந்தியகண்ணீரும், போரிலேபெருகிடும் இரத்தமும், இந்தப்புதிய நிலைக்குக் காரணம். ஆனால், போருக்குப்பிறகு, இந்தப் பெருநிதியைச், சிறுமதியுடன் பயன்படுத்தினால், பலன் இல்லை. இதை உணர்ந்து, இப்போதே, பொருளாதாரப் புலவர்களும், வடநாட்டு வாணிபர்களும், இப்பெருந்தொகை, திருப்பிக்கொடுக்கப்படும் வகை எவ்விதமிருக்கவேண்டும் என்பதுபற்றிய பிரச்னையிலே, அக்கறை கொண்டுள்ளனர்-திராவிடம் நீங்கலாக!

ஆயிரம்கோடி ரூபாயும், ஆர்கண்டிஜாக்கட்டாகவோ அணில் மார்க் சிகரெட்டாகவோ, சந்திரகாந்தச் சோப்பாகவோ சுந்தரிகளுக்கேற்ற சீப்பாகவோ, திருப்பித்தரப்படும் முறை, போக போக்கியத்தை மட்டுமே கருதும் புல்லரின் வழி, இதனால் நாட்டுப் பொதுவளம் பண்படவோ, செல்வம் செழிக்கவோ, தொழில் வளரவோ, மார்க்கமிராது. ஆடம்பரத்தோடு சரி. ஆனால் இந்தப் பெருந்தொகைக்கு, இங்கு நவீன, விஞ்ஞானமுறைக்கேற்ற தொழில் அமைப்புகளுக்குத்தேவையான இயந்திரங்களையும் நுட்பமான விஞ்ஞான விளைவுகளையும், வெளியிலிருந்து வரவழைத்தால், பொதுவளம் வளரும், பலகோடி மக்களுக்கு வாழ்க்கைவழி கிடைக்கும், உயிர்நாடி போன்ற பல பொருள்களுக்குக் கடலைக் கடந்து கைநீட்டி நிற்கும் நிலைமாறும். இதனை அறிந்தே, போருக்குப்பிறகு, புதிய இயந்திரங்களை, புதியதொழிற்சாலை அமைப்புகளுக்கு அவசியமான சாதனங்களை வரவழைக்கவேண்டும், என்று நிபுணர்கள் கூறுகின்றனர், திட்டம் தீட்டுகின்றனர், புள்ளிவிவரம் சேர்க்கின்றனர், தொழில்முறை வகுக்கின்றனர். இந்தத் துறையிலே, திராவிடநாட்டுத் தலைவர்கள் இன்றுவரைதுளியும் அக்கறை காட்டவில்லை. சர். இராமசாமி முதலியார் அவர்கள், இரண்டோர் திங்களுக்கு முன்பு சென்னை வந்தபோதுகூட, இங்குள்ள வியாபாரத் துறையினர், விலைகட்டுப்பாடு எப்போது குறையும், சர்க்கார் தலையீடு எப்போது நீக்கப்படும், சரக்குகளின் நடமாட்ட சுதந்திரம் எப்போது ஏற்படும், என்ற பிரச்னைகளைப்பற்றி ஆவலோடு பேசினரேயல்லாமல், நாம் குறிப்பிடும் எதிர்கால இயந்திரத்தொழிற்சாலை அமைப்புக்கானமுறைகளைப்பற்றியோ, திராவிடத்திலே, இன்னின்ன வகையான தொழிலைப்போருக்குப்பிறகுப் புதிதாகத்துவக்க இயற்கை இடந்தரும், இயற்கைவளத்தை இன்னின்ன இடர்சூழ்ந்துளது, அதனைப்போக்கும் வழி இவை; எனும் பிரச்னைபற்றியோ பேசினாரில்லை. வடநாடு வகையுடன் இதுவிஷயத்திலிருக்கத் திராவிடம், தெளிவுபெறாதிருப்பது, மனக்கஷ்டமூட்டுவது மட்டுமல்ல, எதிர்காலத்தை இடர்மிக்குளதாக்கும்என்றேநாம்அஞ்சுகிறோம். காங்கிரஸ்கட்சியினருக்குத் திராவிடம் தனிநாடு என்ற தத்துவமே பிடிக்காது, எனவே, அவர்கள் இது விஷயத்திலே அக்கறைகொள்ளத் தான் மாட்டார்கள். நமது நிலை அப்படியல்ல. எனவே, இனிச்சேலத்திலேகூட இருக்கும், நீதிக்கட்சி மாநாட்டிலே,திராவிடநாட்டின் தொழில்வளப் பெருக்கத்துக்கான ஓர்திட்டம் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஒருதனிக் குழு அமைக்கப்படவேண்டும்.

இவ்வாண்டு இதுவிஷயமாக முஸ்லீம் லீக், முக்கியமானதோர் அமைப்பை ஏற்படுத்தியதுகாண நாம் மிகமகிழ்ச்சிஅடைகிறோம். இன்றுமட்டுமல்ல, பொதுஉடைமைஆட்சிஏற்படாதவரை, எங்கும், எவரிடம், எந்தப்பகுதியினர் அல்லது வகுப்பினரிடம்பொருளாதார இயந்திரம் இருக்கிறதோ, அவர்களே ஆள்பவராகவோ, ஆள்பவரைஆட்டிவைப்பவராகவோ இருக்கமுடியும். எங்கும் ஆஸ்ரமங்கள்நிறைந்து, காவியேநாடாண்டால் மட்டுமே, பொருளாதார ஆதிக்கத்தைப்பற்றிய சிந்தனை இலாதொழியும். இந்நிலை சில எட்டிற்காணவும், பாட்டுமொழி பேசும் புலவர்களின் பொன்னுரையிலே கேட்கவும் இயலுமேயன்றி, நடைமுறைக்கு ஏற்றதன்று. தொழில்வளம், வாணிபவளம், உலகிலே எப்பகுதியிலே அதிகமாகஉளதோ, அப்பகுதி உலகை ஆளவழிவகைதேடிக்கொள்ளும். இங்கும், இந்துஆட்சிகூடாதுஎன்று இயம்பும் முஸ்லீம், பாக்கிஸ்தானைப் பரிபாலிக்கத் தொடங்கியபிறகு, தொழில்வளத்தைப் பெருக்காதுபோனால், சுயாட்சியின் சுவையை அனுபவிக்கமுடியாது. வடநாட்டிலேஉள்ள, வியாபாரக்கோமான்களும், ஆலைஅரசர்களும், இன்று அரசியலை' ஏலம் எடுக்கக்கூடியநிலையிலே உள்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆயிரம் கோடி.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் என்பதையோ, உண்மையிலேயே பிரிட்டிஷாருக்கு இந்தியாமீதுள்ள பிடி தளர்ந்துவருவதற்கும், பிடியினால் உண்டாகும் பலன் குறைவதற்கும் காரணம், பெருத்தகுரல்கொண்ட தேசியவாதியின் கிளர்ச்சியல்ல! ஆலைஅரசர்களும், வணிகவேந்தர்களும், பொருளாதாரப் போர் முனையிலே, வெளிநாட்டுப்படையைத் தாக்கி வருவதேயாகும்! என்பதையோ மறுப்பதற்கில்லை. ஆங்கிலக்கம்பெனிகள் எங்கும் காணப்பட்ட காலம்போய், ஆங்கிலருக்கு வேலைதரும் நிலையிலுள்ள வடநாட்டுக்கம்பெனிகள் எங்கும் நிலைத்துவிட்டன. இரும்பரசனாக டாடா கம்பெனியும், பருத்திப்பார்த்திபனாக பஜாஜ் பிர்லாகூட்டமும், இருப்பது, காந்தியும், ஜவஹரும்நடத்தும் கிளர்ச்சியைவிடப், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குப் பேரிடி என்பதை, ஆரஅமரயோசிப்போர் உணருவர். பிரிட்டிஷ் பிடிதளரத்தளர, மார்வாரி மண்டலமாக, இந்தியபூபாகம் மாறத்தொடங்கிவிட்டது. நாட்டுக்கு நரம்புபோன்ற தொழில்கள், வீரிய விருத்திமருந்துபோன்ற ஆலைகள் முதலியன, "பாரதகண்டத்துயூதர்கள்" கையிலே உள்ளன. இந்தநிலையிலே, பாகிஸ்தானும் இருக்குமானால் பயன்என்ன? இதனையோசித்து, ஜனாப்ஜின்னா அரியதோர் அமைப்பை இதுபோது ஏற்படுத்தியுள்ளார். இக்குழு, பாக்கிஸ்தான் வட்டாரத்தின் இயற்கை வளத்தைக்கண்டறிந்து, அதற்கேற்றமுறையிலே, என்னென்ன தொழிற்சாலைகளை எவ்வண்ணம் ஏற்படுத்தமுடியும் என்பதற்கான திட்டம் தயாரிக்கும். நாம், கூறும் யோசனை, இதையொட்டியதே. திராவிடம், தனியரசுடன் வாழவேண்டுமானால், பொருளாதாரத்திலே பிச்சைக்கின்னமேந்திக்கொண்டிருக்கக்கூடாது. அவ்விதமான அவசியத்திலே நம்நாடுஇல்லை. இயற்கை, லோபித்தனமுடையதுமன்று. வளமற்றதல்ல நம்வட்டாரம். தொழிலுக்கு ஏற்றஇடமே. வாணிபம் ஓங்கியிருந்தஇடம். வகையறிந்தோர் வாழுமிடம். திராவிடநாட்டின், இயற்கைவளத்தையும், எங்கெங்கு என்னென்ன களஞ்சியங்கள்அமையும், என்பதையும், கண்டறிந்து, விஷயத்தைத்தொகுக்கவேண்டும். திராவிடத்திலே, என்னென்ன விதமான தொழிற்சாலைகளை எவ்வெவ்விடத்திலே ஏற்படுத்தலாம், என்றதிட்டத்தைத் தயாரிக்கவேண்டும். இதற்கென ஒரு தனிக்குழு, தளராஊக்கத்துடன் பணியாற்றவேண்டும். இதுபோது, என்னென்னவிதத்திலே, எவ்வளவுபொருள், வெளிநாடுகளுக்குப் போகிறதென்ற கணக்கும், இப்பொருள்களை இங்கேயே உற்பத்திசெய்யும்வழி என்ன என்பதையும், கண்டறிந்து, ஓர்வேலைத்திட்டத்தைத் தொகுத்தல்அவசியம்.

ராஜாசர் அண்ணாமலையார், சர். சண்முகம், C. S. இரத்தினசபாபதி முதலியார், இக்கமிட்டுக்கு அமைப்பாளர்களாக இருந்து, ஆந்திர, கேரளத், துணைத்தலைவர்களைத் தெரிந்தெடுத்துப் பணிபுரியத்தொடங்கினால், பயன்மிகுதியுமுண்டு என்பதனைக்கூற வேண்டுமோ! இன்று, குடும்பமேன்மைக்குமட்டுமே பயன்படும், இத்திராவிடத் திருமணிகளின் அறிவாற்றல், பிறந்த நாட்டுக்குப் பயன்படுவதைக் காண்பதைவிடச் சிறந்தபேறு, அவர்களுக்குத்தான் என்ன இருக்கமுடியும்! செல்வத்தை இவர்கள்கண்டு கண்டு இந்நேரம்சலித்தேபோயிருக்கவேண்டும்—சபலகுணம் மிகச் சக்திவாய்ந்ததுதான் என்றபோதிலும், அவர்களைநாம், திராவிடம்எனும் பெரியதோர்குடும்பப்பாதுகாப்பாளர்களாக வன்றோ இருக்க அழைக்கிறோம், தம்வாழ்நாளிலே, பிறந்தஇடத்தின் பொருள் வளத்தைப்பெருக்கி, அதன்பயனாக மக்களின் வாழ்க்கைவளத்தையே வளர்த்தோம் என்றதிருப்தி, சொந்தத்திலே சொகுசான வாழ்வைஅனுபவிக்கமட்டுமே பயன்படும் பணக்குவியலைவிட, பன்மடங்கு, இன்பந்தரவல்லது. இந்த அமைப்பைஉருவாக்கக், கோவைமோட்டார் மன்னர் தோழர் G. D. நாயுடு அவர்களே, முனையவேண்டுமென்பது, நமதுவேண்டுகோள். பிறிதோரிடத்திலே இப்பெரியாரின்பெருங் குணவிளக்கமான கொடைவிபரம் வெளியிட்டுள்ளோம்.

சேலத்திலே, நடைபெறஇருக்கும் நீதிக்கட்சிமாநாட்டிலே, இதற்கான வழிகாணவேண்டும். இன்று நமக்கு அவசியமான்து, எந்தத் தலைவர்தேவை, என்ற பிணக்கூட்டும் பிணிப்பேச்சல்ல, பணிபுரியக்குழுவும், பயனுள்ளதிட்டமுமேயாகும்.

இத்தகைய திட்டங்கள் இல்லையெனில், ஆயிரமாயிரம் கோடியாகக்கூடப் பணம் கிடைப்பினும், அரியபெரிய தலைவர்களின் அணிவகுப்புப்பெருகினும் பயன் இராது. ஆகவே இதுபற்றி அறிவாற்றலுள்ள நமது தலைவர்கள் யோசிக்கவேண்டுகிறோம்.

---

## அறிவிப்பு.

'திராவிடநாடு' 'குடிஅரசு' விளம்பரப் பைகள் விற்பனைக்குத் தயாராகிவிட்டன. உத்திரவாதமுள்ளது. பாஸ்ட் கலர். (மூன்று கலர்) சய்ஸ் 12X15. விலை 8 அணா. மாதிரி விரும்புவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். N. B:- ஏஜண்டுகளுக்கு $6\frac{1}{4}\%$ கமிஷன். நமது பத்திரிகை ஏஜண்டுகளுக்குத்தனிச்சலுகைதரப்படும்.

**K. A. ஷண்முகம்.**

நியூஸ் ஏஜண்ட்:— தமிழர் உணவுவிடுதி, கரூர்.

## தூத்துக்குடி, "பஞ்சாயத்துகோர்ட்டு தேர்தல்"

### நீதிக்கட்சியின் நிகரில்லாவெற்றி!

தூத்துக்குடிநகர் பஞ்சாயத்துகோர்ட் தேர்தல், 30—12—43 ஸ்தல சப்மாஜிஸ்டிரேட் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. நகர்முக்கியஸ்தரும்நீதிக்கட்சித் தலைவருமாகிய தோழர் P.U. பொன்னுசாமிநாடார் அவர்கள் வகையறாப்பெயர்கள் அறுவரும், காங்கிரஸ் தோழர், திரு. பெ. கந்தசாமிப் பிள்ளை, வகையறாப் பெயர்கள் அறுவரும் போட்டியிட்டனர். பிந்தியகூட்டம், வழக்கம்போல் வந்தேமாதரக்கூப்பாட்டுடன், இல்லாததும் பொல்லாததுமான புளுகுப்பிரசாரங்கள் பல புரிந்தும், தோழர் P. V. பொன்னுசாமி நாடார் வகையறாக்களுக்கு 1562 வாக்குகளும், கந்தசாமிப்பிள்ளை, வகையராவுக்கு 662 வாக்குகளும் கிடைத்தது' தோழர் P. V. பொன்னுசாமி நாடார் வகையறாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தல் முடிவுகண்ட பல்லாயிரக்கணக்கான மக்களும், இராமசாமிப் பெரியார் வாழ்க! நீதிக்கட்சி வாழ்க! திராவிடநாடு திராவிடருக்கே! என்ற முழக்கத்துடன் நகர்வலம்வந்தகாட்சி கண்கொளாக் காட்சியாக இருந்தது.

---

## பிறப்பு.

தூத்துக்குடிநகர். தெ. இ. ந. உ. சங்க உபதலைவர் தோழர் தங்கய்யா ஆரோன் அவர்களின் அருமைத் துணைவியாரும் கடந்த 7—2—41ல் பெரியார் E. V. இராமசாமி அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவருமாகிய தோழர் திருமதி. ஜானகி-தங்கையாஆரோன் அவர்களுக்கு 31—12—43ல் ஆண்மகவு ஒன்று பிறந்து தாயும், சேயும், சுகத்துடனிருக்கின்றனர். குழந்தைக்கு "சிங்கராஜன் பன்னீர் செல்வம்" என்று பேர் சூட்டப்பட்டது. இந்நினைவின்பொருட்டு குடிஅரசு, திராவிடநாடு, பத்திரிகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2—0—0 நன்கொடை வழங்கப்பட்டது.

---

## தோற்றம்.

போளூர், டெய்லர் A. கோபால் அவர்களுக்கு ஆண்மகன் பிறந்து, அதற்கு அண்ணாத்துரை என்று பெயரிட்டு இருக்கிறார். இதனை முன்னிட்டு திராவிட நாடு பத்திரிக்கைக்கு ரூ. 1—0—0 நன்கொடை அளிக்கப்பட்டது.

# கதிரேசருக்கு!

2-ம் பக்கத்தொடர்ச்சி.

சிலஆண்டுகளே ஆயின, அதற்கு முன்பிருந்தே எடுத்துக்கூறும், சமயவாதிகளில் பெரும்பான்மையினர் ஒழுக்கசீலர்களாகவே இருந்தனரா? இன்று சமயத்திலே வல்லவராகவும், "சரசமாடும் சமயஞானம்". தெரிந்த நிபுணராகவும் உள்ள செல்வர்கள் இல்லையா? ஆலயங்களிலே, ஆதீனங்களிலே, கூடங்களிலே, சமாஜக்கட்டிடங்களிலே, சைவமணம் கமழும் இல்லங்களிலே, ஒழுக்கம் நிலை நாட்டப்பட்டுவிட்டதா? வேற்றுச்சமயங்களை வெறுத்தொதுக்காமல் ஏற்றுக்கொள்ளும் இயல்புடையது எமது சைவம் என்று இயம்பினீரே, உண்மையா? சமணப்பெருமக்களை, எவ்வளவு இழிவாகச் சமயாச்சாரியார்கள் கூறியுள்ளனர். ஆண்டவன் முன்னிலையிலே பாடுகின்றனரே, தூற்றலை. சரியா? பிறசமயத்தை வெறுத்தொதுக்காதசெயல் இதுதானா? தூற்றினதோடா முடிந்தது? கழுவேற்றினரே! கடவுட்கொள்கைக்கோ, சமயப் பண்புக்கோ, மனிதாபிமானத்துக்கோ, பகுத்தறிவுக்கோ, சாதாரண பச்சாதாபத்திற்கோ அடுத்ததாகுமா அச்செயல்! இதற்குத்திருவிழா நடத்தும் திருவாளர்களல்லவா, சைவத்திருவினர். இந்தச்சைவத்தைத்தானா, வேற்றுச்சமயங்களை வெறுக்காத இயல்புடைத்து என்று கூறினீர். பேராசிரியரே, பல ஆண்டுகளுக்கு முன்பு, இரங்கத்தக்க நிலையிலுள்ள எம்மனோர், நும்மனோர் பால் விடுத்த கேள்விப்பட்டியல் ஒன்றுண்டு. நீடூழி வாழ, நீவிர் அரன் அருள் வேண்டினீர்கள், அடியேனுடைய கோரிக்கையும் நீடூழிவாழ வேண்டும் நீவிர் என்பதே, நாங்கள் திருந்தவேண்டும் என்பதற்காகவே தாங்கள் நீடூழி வாழ வேண்டுமென்று விரும்புவது கேட்க, மகிழ்ச்சி இரட்டிப்பே. எமக்கும், நெடுநாட்களாகப், பதில் கூறாமலே, இருக்கும் சிவநேசச்செல்வர்கள், இக்கேள்விகட்குப் பதில் கூறுமுன்னம், பரமசிவனிடம் போய்விடக்கூடாது, என்பதே விருப்பம். ஆகவே அன்பரே! ஆசிரியரே! நெடுநாளையக்கேள்விகளை இதோ வெளியிடுகிறேன். சிவநெறியின் மீதுள்ளபற்றுக்காக வேண்டியேனும், சிற்றினமாகிய எம்மனோர் மீது பரிவு காட்டாவிடினும், சிற்றம்பலத்தானிடம் அன்புகொண்டாகிலும், பதில்தாமுயலுங்கள்-மக்கள் மன்றத்திலே!!

## வினாக்கள்.

1. நமது நாட்டில் சைவசமயத்திற்கு முன்னால் ஏதாவது சமயம் இருந்ததா?

2. அது எது?

3. சைவசமயம் என்பது எப்போது உண்டாயிற்று?

4. அதற்கு முதல் கர்த்தா அல்லது சமயாச்சாரி என்பவர் யாவர்?

5. சைவசமயத்திற்கு மற்ற சமயத்தில் இல்லாத தனிக்கொள்கைகள் என்ன?

6. அதற்கு ஆதாரம் யாது?

7. சைவம் என்பது சிவன் என்னும் ஒரு உருவமுள்ள கடவுளை வழிபடு கடவுளாகக்கொண்டதா?

8. அல்லது தனித்தெய்வமில்லாமல்ஏதாவது கொள்கைகளை மாத்திரமோ அல்லது குணத்தை மாத்திரமோ அடிப்படையாகக்கொண்டதா?

9. சிவன்என்பது ஒருகடவுள்பெயரா?

10. ஒருதன்மையா?

11. ஒரு குணமா?

12. சிவனுக்கு உருவம் சொல்லப்படுகிறதே அது என்?

13. அதற்குப் பெண்டு பிள்ளைகளும் இருப்பதாகக் காணப்படுகின்றதே அது என்?

14. சைவசமய சம்மந்தமான பல கடவுள்களுக்கு உள்ள ஆயிரக்கணக்கான பெயர்கள்வடமொழியில்இருப்பானேன்?

15. ஆயிரக்கணக்கான கடவுள்களுக்கும் அவர்களது பெண்டு பிள்ளைகளுக்கும் வேறு வேறு பெயர்கள் என்?

16. சைவத்திற்கும் சமணக்கொள்கைகளுக்கும் பௌத்தக் கொள்கைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

17. ஆரிய வேதத்தையும் ஜீவபலிவேள்வியையும் சைவம் ஒப்புக்கொள்ளுகின்றதா மறுக்கின்றதா?

18. சைவ சமயாச்சாரியார்கள் என்பவர்கள் ஆரிய வேதத்தையும் அதில் காணும் வேள்விகளையும் ஒப்புக்கொள்ளுகின்றார்களா மறுக்கின்றார்களா?

19. சமணர்கள் வேதவேள்வியை நிந்தனைசெய்தார்கள் என்றால் அது எந்த வேதத்தையும் வேள்வியையும்?

20. சைவ சமயத்திற்குள்ள சித்தாந்தமும் ஆகமும் வடமொழியா தென்மொழியா?

21. சைவசயத்தையே சேர்ந்த சைவக் கடவுள்கள் இருக்கும் தனித்தனி ஊர்களுக்குத் தனித்தனி பெருமை என்?

22. சமயாச்சாரிகள் என்போர்களால் பாடப்பட்ட ஊர்களுக்கும் பாடப்பட்ட கடவுள்களுக்கும் மாத்திரம் அதிகமான மதிப்பு என்?

23. சைவ சமயாச்சாரியர்களும் சைவ சமய பக்தர்களும் பௌத்தர்களையும் சமணர்களையும் துன்புறுத்தியதேன்?

24. துன்புறுத்தவில்லையானால் தேவாரம் முதலியவைகளில் அவர்களைக்கண்டபடி இழித்துக்கூறி வைதிருப்பதேன்?

25. வடமொழிக் கதைகளையும் வடமொழிப் புராணங்களையும் தள்ளிவிட்டால் சைவர்களுக்கு ஏதாவது கடவுளுண்டா?

26. சைவத்திற்கு ஏககடவுள் வணக்கமா? பல கடவுள் வணக்கமா?

27. எத்தனை கடவுள்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

28. இதோடு தீர்ந்ததா இனியும் உண்டாகுமா?

29. சைவசமயத்திற்குக் கோவில்கொள்கை உண்டா?

30. விக்கிரக ஆராதனை உண்டா?

31. வேறு ஒருவன்அர்ச்சகனாகஇருந்துதான் கடவுளைவணங்க வேண்டுமா?

32. ஆகிய இவைகளுக்கு ஆதாரம்எது?

33. சைவர்களில் ஒவ்வொருவரும் அவரவர் வணங்கவேண்டியகடவுளை நேரில் பூசனைபுரிய அவரவருக்குஉரிமையுண்டா?

34. சைவத்தில் ஜாதி வித்தியாசம் உண்டா?

35. சைவக் கோவில்களில் இப்போது ஜாதிவித்தியாசம் பாராட்டப்படுகின்றதா?

36. அது சைவத்திற்கு முரண் அல்லவா?

35. முரணானால்அம்முரணுக்கு இதுவரை சைவர்கள் ஏதாவது பரிகாரம் செய்தார்களா?

38. கடவுளை வணங்கக் கற்பூரம் கொளுத்தி வைத்து வணங்கவேண்டும் என்பதற்கு ஏதாவது ஆகமம் உண்டா? எந்த ஆகமத்தில் சொல்லுகிறது?

39. ஏதாவது ஒரு ஆகமத்தில் சொல்லப்பட்டால் அது ஆரியர்கள் ஆகமமா? தமிழர்கள் ஆகமமா?

40. கற்பூரம்கொளுத்தும் வழக்கம்எது முதல் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது?

41. பிள்ளையார் என்ற ஒரு கடவுளுக்கு சைவத்தில் இடம் இருக்கின்றதா?

42. கந்தபுராணத்தை சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா? திருவிளையாடல் புராணத்தை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

43. ஒப்புக்கொள்ளுவதானால் அதுசைவத்தில் பொருந்தியதுதானா?

44. சைவர்கள் சிவரகசியத்தையும் சிவமகாபுராணத்தையும் சிவபராக்கிரமத்தையும் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

8-ம் பக்கம் பார்க்க.

## கதிரேசருக்கு!

(7-ம் பக்கத்தொடர்ச்சி.)

45. நால்வர்கள் பிர்மாவையும் விஷ்ணுவையும் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

46. அவை தனித்தனிக் கடவுள்களா?

47. நால்வர்கள் விஷ்ணுவைத் தாழ்த்திப்பாடி இருந்தால் அது மதத்துவேஷமா அல்லவா?

48. மனுஸ்மிருதியையும் பராசரஸ்மிருதியையும் சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

49. சமணர்கள் கழுவேற்றப்பட்டதைச் சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா? கோவில்களில் இன்றும் திருவிளையாடல் புராணக்கதை உற்சவங்கள் நடக்கின்றதை மறுக்கின்றார்களா ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

50 திருநீறு எதற்காகப் பூசுவது?

51. இலிங்கத்திற்கும்ஆவுடையாருக்கும் சொல்லும்கதையை ஒப்புக்கொள்ளுகின்றார்களா இல்லையா?

52. ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்தப் படிக்கு உள்ள வடமொழி ஆதாரத்திற்கு என்னபதில் சொல்லக்கூடும்?

53. இலிங்கம்என்னும்வார்த்தைஎன்ன பாஷை? அதற்கு என்ன அர்த்தம்? எந்த ஆதாரப்படி?

54. கைலயங்கிரி எது, சுப்பிரமணியன் எது, கந்தன் எது, குமரன் எது?

55, மலையரசன் மகளென்றால் என்ன?

56. இப்பொழுது இதுவரை நடந்து வந்த கோவில்முறை பூசைமுறை உற்சவமுறை முதலியவைகளால் ஏற்பட்ட நன்மைகள் என்ன?

57. இவை இப்படியே நடக்கவேண்டியவைதானா?

58, இவைகளின் பேரால் பலலக்ஷம் ரூபாய்கள்செலவாகின்றதுநியாயந்தானா?

59. அதை நிறுத்தி அச்செலவையும் காலத்தையும் வேறுவழியில் திருப்பலாமா அல்லது இப்படியேதான் இருக்கவேண்டுமா?

60. சைவர்கள் மேல்லோகத்தை ஒப்புக்கொண்டார்களா?

61. மறுபிறப்பை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

62. திதிகளை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

63. பிராமணர்களைஒப்புக்கொள்ளுகின்றார்களா?

64. சமயாச்சாரிகளின் அற்புதங்களை எல்லாம் அப்படியே நடந்ததாகவே ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

65. மற்றும் சைவப்புராணங்களில் உள்ள எல்லா அற்புதங்களையும் நடந்ததாகவே ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

66. ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொருசாமிக்கும் ஏற்பட்ட ஸ்தலமூர்த்தி தீர்த்தபுராணங்களை உண்மை என்பதாக ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

67. சைவர்களுக்குக் கலியாண முறை எது?

68. சைவர்களுக்கு அல்லது சைவச் சாமிகளுக்குத் தேவதாசி முறைகள் உண்டா?

69. வருணாசிரமம் உண்டா?

70. உண்டென்றால் ஆதாரம் எது?

71. இல்லை என்றால் ஆதாரம் எது?

72. இப்பொழுது அமுலில் இருப்பதற்குக் காரணம் என்ன?

73. சைவமடங்கள் எதற்கு?

74. அவைகள் இதுவரை சாதித்தது என்ன?

75. அம்மடங்கள் இனியும் அப்படியே இருக்கவேண்டியதுதானா?

76. இம்மடங்களைத் திருத்த இதுவரை எந்தச் சைவராவது முயற்சித்ததுண்டா?

77. இப்பொழுதுள்ளசைவர்களில் சைவ சமயத்தைப்பற்றிஅபிப்பிராயம் சொல்ல நிபுணர் யார்?

78. அருகதை உடையவர் யார்?

79. பாரதம், இராமாயணம், பாகவதம் முதலிய வைணவப்புராணங்களில்வரும் சிவனைச் சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

80. வடமொழியும், அம்மொழியிலுள்ள நூல்களும்இன்றிச் சைவசமயத்தை விளக்கமுடியுமா?

## நாடகக்கலை அபிவிருத்தி மகாநாடு.

மேற்படி மகாநாடு ஜனவரி-மீ கடைசியில் ஈரோட்டில் நடைபெறவிருக்கின்றது. மகாநாடு சிறப்பாக நடப்பதற்குப் பொதுமக்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளைச்செய்யுமாறு வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

காரியதரிசிகள்:—

M. கருப்பையா, (மதுரை)

T. N. சிவதாணு, (M. S. B. S. சபை)

வரவேற்புக்கழகத்தலைவர்:

R. K. வெங்கடசாமி நாயகர், முனிசிபல் சேர்மன், ஈரோடு.

நிதிகர்ப்பாளர்:

S. மீனாட்சிசுந்தர முதலியார், B. A; L. T; ஈரோடு.

## சந்திரோதயம்.

சிதம்பரம், தில்லையம்மன் தியேட்டரில் காஞ்சித் திராவிட நடிகர்கழகத்தாரைக் கொண்டு "சந்திரோதயம்" என்னும் நாடகத்தை நடத்துவித்த புவனகிரி சந்திரோதயநாடகக்குழுவினரால் வெளியிட்ட வரவு செலவு கணக்கும் அறிக்கையும்.

**வரவு.**

| | | |
|---|---|---|
| நாடகச்சீட்டுகள் விற்றுவரவு | ரூ. | 1845-0 |
| நன்கொடை வரவு | ரூ. | 143-0 |
| ஆக ரூபா... | | 1988-0 |

**செலவு.**

| | | |
|---|---|---|
| பணமுடிப்பு | ரூ. | 501—0—0 |
| நடிகர்கள்வழிநடைச்செலவு | | 195—0—0 |
| மேக்கப்; உடுப்பு | ரூ. | 70—0—0 |
| பக்கமேளம் | ரூ. | 50—0—0 |
| வரி | ரூ. | 248—6—0 |
| உணவு வகையறா | ரூ. | 171—8—10 |
| ஆட்கூலி | ரூ. | 40—1—3 |
| சீட்டுகள் விற்பனையை பொறுத்த வழிநடைச் செலவு | | 38—5—9 |
| கொட்டகைசெலவு,சீன் சீத்துப்பந்தல் உள்பட | | 111-13—0 |
| விளக்கு வகையறா | ரூ. | 98—3—9 |
| கொட்டகை லைசென்ஸ் தாள், பதிப்புக்கூலி அளவைப்பொறுத்த வழிநடைச்செலவு | | 98-15—1 |
| அஞ்சல் செலவு | ரூ. | 2—7—6 |
| ஆக ரூபா | | 1625-13—2 |
| நிகரம் ரூபா | | 362—2-10 |

நிகரம் இருக்கும் தொகை இயக்கத் தலைவர்களின் துணைகொண்டு இயக்க வளர்ச்சியைக் குறித்தே செலவுசெய்யப்படும்.

## திருமணம்.

13—12—43 திங்கட்கிழமை பகல் திருப்பரங்குன்றத்தில் தஞ்சாவூர் தோழர்களான R. சண்முகம் என்ற மணமகனுக்கும், கமலாம்பாள் என்ற ஆரிய மணமகளுக்கும் தமிழர்முறைப்படி திருமணம் நடைபெற்றது. திரு A. வேணுகோபால் அவர்கள் தலைமையில் பலநண்பர்கள் சீர்திருத்தக்கலப்புமணத்தை ஆதரித்துப் பேசினார்கள். திருமணத்தில், மதுரை, வாடிப்பட்டி, தஞ்சைத்தோழர்கள் ஏராளமாய்ப்பங்கெடுத்துக்கொண்டனர். திருமண நன்கொடையாக திராவிடநாடு பத்திரிகைக்கு ரூ. 2. வழங்கப்பட்டது.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.